பட்டுள்ளது. ரெகுலேட்டர் கட்டுவதன் முக்கிய காரணமே, புதிதாகக் கட்டப்பட இருக்கும் மதகிற்கு பாசனத்திற்கு மட்டம் அளிப்பதற்காக மட்டுந்தான். மேலும் கட்டப்பட இருக்கும் ரெகுலேட்டர் இப்போதுள்ள கீழ் மட்ட நிலங்களுக்கு பாசன நீர் தட்டில்லாமல் வழங்குவதை கணக்கில் கொண்டே திட்டமிடப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட இருக்கும் ரெகுலேட்டரின் கீழே உள்ள ஆயக்கட்டுகளின் விஸ்தீரணம், 21,000 எக்கர் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த 21,000 எக்கர் ஆயக்கட்டுகளுக்குத் தேவையான நீர் வழங்கப்படும். புதிய ரெகுலேட்டரினால் இந்நிலங்கள் பாதிக்கப்படாது, இப்புதிய ரெகுலேட்டரின் கீழ்மட்டம், ஆற்றில் தற்போதுள்ள மட்டத்திலேயே கட்டப்பட இருக்கிறது. ஆகையினால் இந்த ரெகுலேட்டரால் கீழே உள்ள பாசனக்காரர்களின் விவசாயம் பாதிக்கப்படும் என்று அஞ்சத் தேவையில்லை.

திரு. பி. ஜயராஜ்: தலைவர் அவர்களே, மாயவரத்தில் ஓடுகின்ற பழங் காவேரி மேடிட்டதன் காரணமாக புதிய ரெகுலேட்டரைக் கட்ட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. பழங்காவேரி மேடிட்டிருப்பதை மாடர்னைசேஷன் செய்தால் ஏற்கனவே உள்ள பாசனத்திற்குத் தண்ணீர் செல்லாது. புதிதாக அரசாங்கத்தால் கட்டப்படுகின்ற ரெகுலேட்டர் சாதகமாக இருக்காது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் ரெகுலேட்டர் கட்டப்படுகிறது. 21,000 எக்கருக்குப் பாதகம் ஏற்பட்டதுபற்றியெல்லாம் அரசாங்கம் தீர்க்கமாகப் பரிசீலித்த பிறகுதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது.

(4) உள்ளாட்சித் துறை அமைச்சர்மீது தான் சாட்டிய குற்றச்சாட்டிற்கான ஆதாரங்களைக் கூறும் வகையில் தன்னிலை விளக்கம் அளிக்க திரு. ராமச்சந்திர துரை அனுமதி கோரல்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதியன்று சட்டப் பேரவைத் துறை செயலாளர் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதிலே, "1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23-ம் தேதியன்று நடந்த 1969–70-ம் ஆண்டிற்கான துணை நிதி மதிப்பீட்டிற்கான பொது விவாதத்தின்போது, நாமக்கல் கல்லூரிக்காக நன்கொடை வசூலித்தது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்மீது ஒரு குற்றச்சாட்டைச் சாட்டியது நினைவிருக்கலாம். அதற்கான ஆதாரங்களைத் தாங்கள் தருவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறியிருப்பதும் நினைவிருக்கலாம். அதுபற்றிய ஆதாரங்கள் ஏதேனும் தங்களிடம் இருப்பின், அவற்றை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்பி வைக்குமாறு தாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்" என்று இருக்கிறது. அதற்கான ஆதாரங்களைக் கூறும் வகையில் 81-வது விதியின்கீழ் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்கவேண்டுமென்று 20-ம் தேதி தங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். அந்த விளக்கத்தை இந்த அவையிலே படிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: பர்சனல் எக்ஸ்பிளனேஷன் 81–வது விதியின்கீழ் சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றித் தங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். இப்போது அதை அவையிலே படிக்க விரும்புகிறேன்.

(திரு. மார்டின் அவர்கள் இருப்பிடத்தில் இருந்தபடி திரு. ராமச்சந்திர துரை அவர்களிடம் குறிப்புகளைக் கூறியபோது......)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மார்டின் அவர்கள் சொல்ல வேண்டிய விஷயங்களைப்பற்றியெல்லாம் லாபியிலே சொல்லியிருக்க வேண்டுமேயொழிய இங்கே வந்து இவ்வாறு இடத்தில் இருந்துகொண்டே பேசுவது சரியல்ல.

தன்னிலை விளக்கம் கொடுக்கவேண்டுமென்றால் என்னுடைய அனுமதி பெற்றுத்தான் கொடுக்க முடியும். நீங்கள் என்ன எழுதி வைத்திருக்கிறீர்கள் என்பதைப் பார்த்து நான் என்னுடைய தீர்ப்பை அறையிலே கொடுக்கிறேன். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

(5) அறிக்கைகள் அளித்தல்.

(அ) 'பாசனம்' பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

திரு. ஏ. வி. பி. ஆசைதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, 'பாசனம்' பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கையை இப் பேரவைமுன் வைக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 1969–70-ம் ஆண்டுக்கான ஐந்தாம், ஆறும் அறிக்கைகள்.

திரு. கி. ஜயராமன்: தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர் சார்பாக 1969–70-ம் ஆண்டுக்கான மேற்படி குழுவின் ஐந்தாம் அறிக்கை, ஆறும் அறிக்கை ஆகியவைகளை அவைமுன் வைக்கிறேன்.

(இ) திரு. டி. மார்டின்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு, திரு. எ. பாலசுப்ரமணியன் மற்றும் சில உறுப்பினர்கள் ஆளுநர் உரையின் போது வெளிநடப்பு செய்ததைக்குறித்த வழக்கு ஆகியவைபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மார்டின் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. பாலசுப்ரமணியன் அவர்களும் மற்றும் சில பேரவை உறுப்பினர்களும் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் நாள் ஆளுநர் உரை அன்று வெளிநடப்பு செய்ததைக் குறித்த வழக்கு ஆகியவைபற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கைகளை அவை முன் வைக்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ்: தலைவர் அவர்களே, நான் ஒரு அமெண்ட்மெண்ட் கொடுக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கையைத்தான் கொடுத்திருக்கிறார்கள். கன்சிடரேஷனுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று 'மூவ்' பண்ணவில்லை. கன்சிடரேஷனுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று மோஷன் வந்த பிறகுதான் அமெண்ட்மெண்ட் கொடுக்க முடியும். விதி 191-ல்

' (*a*) The report of the Committee of Privileges shall be presented to the Assembly by the Chairman of the Committee or by any member of the Committee so authorised.

(*b*) As soon as may be, after the report has been presented, a motion in the name of the Chairman of the Committee or any member of the Committee may be made that the report be taken into consideration.